செ.வெ.எண்:174 நாள்:15.03.2018

முன்னாள் படைவீரர் சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் 15.03.2018 அன்று முற்பகல் 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர் கோரிக்கைகள் தொடர்பாக 41 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட விண்ணப்பங்களை உரிய துறைகளுக்கு பரிந்துரைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையிட்டார்.

மேலும் இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களுக்கு ரூ.1,43,495/- (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து நானூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்)-க்கான நலத்திட்ட உதவிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட அலுவலர்கள், வட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் திரு. ந. முருகன் மற்றும் அலுவலகத்தினர் செய்திருந்தார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி